தினமணி

**ஒருங்கிணைந்த முறையில் தென்னைக்கு உரமிடுதல்**

First Published : 11 Nov 2010 12:29:48 PM IST

திண்டுக்கல், நவ. 10: தென்னை ஒரு பணப் பயிர், விவசாயிகளுக்கு நிரந்தர வருமானத்தைத் தரக் கூடியது. விவசாயிகள் தென்னையில் இருந்து அதிக பலனை எதிர்பார்ப்பது போன்று, உர நிர்வாகம் செய்வதிலும், மரத்தின் தன்மையை நிலை நிறுத்திப் பாதுகாப்பதிலும், மகசூலைக் கூட்டுவதிலும் போதிய நடவடிக்கை எடுப்பதில்லை.

÷தென்னை மரம் ஒரு நீண்ட காலப் பயிர் சாகுபடி. எனவே, அதிக கவனம் செலுத்தி உரிய காலத்தில் உர நிர்வாகம் செய்து பயிரைக் காப்பது அவசியமாகும்.
பொதுவாக தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு உகந்த காலங்கள் ஜூன்-ஜூலை மற்றும் டிசம்பர்-ஜனவரி ஆகும். தென்னந் தோப்புக்குள் மரம் ஒன்றுக்கு 50 கிராம் வீதம் சணப்பு உள்ளிட்ட பசுந்தாள் விதைகளை தூவி வளர்த்து, பூ விடும் தருணத்துக்கு முன் அதை உழுது, மண்ணில் மக்கச் செய்தால் சிறந்த உரமாக மாறிவிடும். மண்ணின் தன்மை உயரும்.

÷தென்னந் தோப்புகளில் தென்னை நார்க்கழிவு, காய்ந்த தென்னை மட்டை இலைகள், இதர கழிவுகளைக் கொண்டு, மண் புழுக்களைப் பயன்படுத்தி மண்புழு கம்போஸ்டு உரம் தயார் செய்து இடுதல் நல்ல பலனைத் தரும்.

÷2, 3 மற்றும் 4 வயதுடைய மரமாக இருக்கும் போது மரம் ஒன்றுக்கு தழைச்சத்து 250 கிராம், மணிச்சத்து 500 கிராம், சாம்பல் சத்து 750 கிராம் வீதம் இடலாம். 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மரம் ஒன்றுக்கு ஆண்டுதோறும் 50 கிராம் தொழு உரம், 600 கிராம் தழைச் சத்து, 320 கிராம் மணிச்சத்து, 1,200 கிராம் சாம்பல் சத்து உரங்களை, மரத்தின் தூரில் இருந்து 1.8 மீட்டர் தூரத்தில் வட்ட வடிவில் குழி எடுத்து மண்ணில் கலந்து இடவேண்டும்.

÷தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் தயார் செய்து தரப்படும் தென்னை மரத்துக்கான டானிக் மருந்து, மரம் ஒன்றுக்கு 200 மில்லி வீதம் மாதம்தோறும் வைத்தல் மற்றும் தென்னை நுண்ணுரம் மரம் ஒன்றுக்கு 1 கிலோ வீதம் இடுதல் ஆகிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்துப் பயன்பெறலாம் என வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 11 Nov 2010 10:01:44 AM IST

தஞ்சாவூர், நவ. 10: மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று வேளாண் உதவி இயக்குநர் மு. ஜேசன் நரேஷ் சுந்தரபாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சம்பா, தாளடி நெல் சாகுபடியில் ஒரு மாவிற்கு 60 கிலோ எடையுள்ள ஆறரை மூட்டைகள் வரை மகசூல் பெறலாம் என எதிர்பார்க்கும், கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஓர் ஏக்கருக்கு அரசின் மானியமாக ரூ. 143-ஐ கழித்து, மீதமுள்ள ரூ. 117-ஐ பிரிமியமாக செலுத்தலாம். இதர விவசாயிகள் அரசின் மானியமாக ரூ. 130-ஐ கழித்து, மீதமுள்ள ரூ. 130-ஐ பிரிமியமாக செலுத்தலாம். ஓர் ஏக்கருக்கான பயிர் காப்பீட்டுத் தொகை ரூ. 13,024.

சம்பா, தாளடி நெல் சாகுபடியில் ஒரு மாவிற்கு 60 கிலோ எடையுள்ள பன்னிரண்டரை மூட்டைகள் வரை மகசூல் பெறலாம் என்று எதிர்பார்க்கும் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஓர் ஏக்கருக்கு அரசின் மானியம் ரூ. 700 கழித்து, மீதமுள்ள ரூ. 574-ஐ பிரிமியமாக செலுத்தலாம். இதர விவசாயிகள் அரசின் மானியமாக ரூ. 637 கழித்து, மீதமுள்ள ரூ. 637-ஐ பிரிமியமாக செலுத்தலாம். இதில் ஓர் ஏக்கருக்கான பயிர் காப்பீட்டுத் தொகை ரூ. 24,420.

இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் நெல் சாகுபடியாளர்களுக்கு இயற்கை இடர்பாடான புயல், மழை, வெள்ளம், வறட்சி மற்றும் பூச்சிநோய் தாக்குதல் ஆகியவற்றால் ஏற்படும் மகசூல் இழப்பை ஈடுசெய்யும் வகையில், இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

தஞ்சாவூர், பெரம்பூர், நாஞ்சிக்கோட்டை, ராமாபுரம், வல்லம், பூதலூர், கண்டியூர் பிர்காவைச் சேர்ந்த வருவாய் கிராமங்களில் வேளாண்மை துறையும், புள்ளியியல் துறையும் இணைந்து நடத்தும் பயிர் அறுவடை பரிசோதனையில் சராசரி மகசூலைக் கணக்கிட்டு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும். நடப்பு சம்பா, தாளடி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் 1420 பசலி ஆண்டிற்கான பயிர் சாகுபடி சான்றை வருவாய்த் துறை அலுவலர்களிடம் பெற்று, இந்தத் திட்டத்திற்கான முன்மொழிவு படிவத்தை நிறைவு செய்து, கடன் பெறாத விவசாயிகள் டிசம்பர் 16-ம் தேதிக்குள்ளும், கடன் பெறும் விவசாயிகள் டிசம்பர் 31-ம் தேதிக்குள்ளும் தங்களது பிரிமியத்தை தொடக்கக் கூட்டுறவு வங்கியிலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ செலுத்தி பயன்பெறலாம்.

இதற்கான விண்ணப்பங்களை தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலர்களிடம் பெறலாம். மேலும் விவரங்களுக்கு தஞ்சாவூர் உழவர் சந்தைக்கு அருகிலுள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை நேரிலோ அல்லது 04362-255931 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

**கிலோ ஒன்றுக்கு சதமடித்தது முருங்கைக்காய் 3ல் தொடங்கி 100ல் ஆட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 13,2010,23:57 IST

கோயம்பேடு : முருங்கைக்காய்க்கு வெளிமாநிலத்தை நம்பியுள்ள நிலையில், தமிழகத்திற்கு அதன் வரத்து படிப்படியாக குறைந்து, கிலோ 100 ரூபாய் வரை விற்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.தமிழகத்தில் தாராபுரம், தேனி, ஒட்டன்சத்திரம், பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் முருங்கைக்காய் விளைச்சல் அதிகளவில் இருக்கும். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட அதிக விளைச்சல் இருந்தது.

அதன் தாக்கமாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் அது மொத்த விலையில் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் வரை விற்கப்பட்டது.
மேலும், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கு தமிழகத்தில் இருந்து முருங்கைக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது.கடந்த சில வாரங்களாக அடுத்த சீசனுக்கு முருங்கை மரங்களில் பூ பூக்கும் பருவமானது, மழையால் பாதிக்கப்பட்டது.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் திடீர் மழையினால் மரங்களில் இருந்து பூக்கள் கொட்டியதில் முருங்கைக் காய்களின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.தற்போது குஜராத் மாநிலம் பரோடா பகுதியில் இருந்து தமிழகத்திற்கு முருங்கைக் காய்களின் வரத்துள்ளது.குறிப்பாக, கோயம்பேடு மார்க்கெட்டிற்கு நாள் ஒன்றுக்கு 15க்கும் மேற்பட்ட லாரிகளில் வரத்து தேவையுள்ள நிலையில், தற்போது 2 முதல் 3 லாரிகளிலே வரத்துள்ளது.இதனால் கடந்த சில வாரங்களாக அதன் விலை கிலோ ஒன்றுக்கு 30, 40, 60... ரூபாய் என கிடுகிடுவென உயர்ந்தது.

மற்ற மாநிலங்களுக்கும் குஜராத்தில் இருந்து முருங்கைக் காய்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால், தமிழகத்திற்கு அதன் வரத்து மேலும் குறைந்தது.இதனால், நேற்றைய நிலவரப்படி கோயம்பேடு மார்க்கெட்டில் மொத்த விலையில் கிலோ ஒன்றுக்கு 80 ரூபாய் வரை விற்கப்பட்டது.

வெளிமார்க்கெட்களில் அதன் விலை 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது.இது குறித்து கோயம்பேடு காய்கறி மார்க்கெட் மொத்த வியாபாரி சவுந்தர ராஜன் கூறுகையில், "" 35 ஆண்டு கால, காய்கறி வியாபார அனுபவத்தில் முருங்கைக்காய் விலை 100 ரூபாய்க்கு விற்கப்பட்டதில்லை.வரத்து அதிகரித்தால் மட்டுமே விலை குறைய வாய்ப்புள்ளது" என்றார்.

**சேலத்தை கலக்கும் "பொள்ளாச்சி' இளநீர்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2010,00:00 IST



சேலம்: இந்நகருக்கு சுற்றுபுற கிராமங்களில் இருந்து இளநீர் கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. தேவை அதிகமானால், மேட்டூர், மேச்சேரி மற்றும் மாதேஸ்வரன் மலையில் இருந்தும் இளநீர் வரவழைக்கப்பட்டு, விற்பனையாகிறது. சமீபத்தில் "மெகா சைஸ்' அளவிலான இளநீர்களை சேலத்தில் விற்பனை செய்கிறார்கள். "பொள்ளாச்சியைச் சேர்ந்த ஒருவர், பெரிய அளவிலான இளநீரை இங்கு இறக்கியுள்ளார். சேலத்தில் கிடைக்கும் சிறிய அளவிலான இளநீர் காய்களை 10 ரூபாய் என விற்றோம். அதில் அதிகபட்சம் 150 மி.லி., இளநீர் இருக்கும். பொள்ளாச்சி இளநீரில் 600 மி.லி., என்ற அளவில் இளநீர் கிடைக்கிறது. மெகா சைஸ் இளநீர் களை 20 ரூபாய் என விற்கிறோம்' என்கிறார் இளநீர் வியாபாரி பெரியசாமி.

**மலைப்பயிரானது "மஞ்சள்'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2010,00:00 IST



நீலகிரி: மேற்கு தொடர்ச்சி மலை ஏராளமான வனவளங்களை கொண்டது. கூடலூர் மலைப்பகுதியில், தேயிலை, காபி, குறுமிளகு போன்ற பணப் பயிர்கள் அதிகமாக விளைகின்றன. இவற்றைத் தவிர, குறுகிய கால பயிர்களான பாகல், பீன்ஸ், பூசணி, கத்தரி, மஞ்சள், இஞ்சி போன்றவற்றையும் சீசனுக்கு ஏற்ப விவசாயிகள் விளைவிக்கின்றனர்.

தொடக்கத்தில், குறைவான விலை கிடைத்ததால் விவசாயிகள் இப்பயிர்களை சிறிய அளவிலேயே பயிரிட்டு வந்தனர். சமீப காலமாக மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், கூடலூர் பகுதி விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த ஆண்டும் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளதால், அதிகளவில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது.

**அசைவ உணவின் சுவைக்கு ஈடு கொடுக்கும் புதுரக காய்கறிகள் விற்பனை "ஜோர்' - நமது சிறப்பு நிருபர்**பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2010,00:00 IST



ஊட்டியில் விளையும் வெளிநாட்டு ரக காய்கறிகளின் விற்பனை, கோயம்பேடு மார்க்கெட்டில் சமீப காலமாக அதிகரித்து வருகிறது. அசைவ உணவின் சுவைக்கு ஈடு கொடுக்கும் இக்காய்கறிகளின் வருகையால், சைவ பிரியர்கள் குஷி அடைந்துள்ளனர். ஒரு சில காய்கறிகள், பழங்கள் குறிப்பிட்ட சீசனில் மட்டுமே விளையும். மீண்டும் அவற்றை சுவைக்க அடுத்த சீசன் வரை காத்திருக்க வேண்டும். ஆனால், விவசாய புரட்சி காரணமாக அனைத்து வகை காய்கறிகள், பழங்களையும் ஆண்டு முழுவதும், நினைத்த நேரத்தில் விளைவித்து சுவைத்து மகிழ முடிகிறது. வீரிய விதைகள் மற்றும் வெளிநாட்டு விதைகள் மூலம், புதுரக காய்கறிகளும் தமிழகத்தில் விளைவிப்பது அதிகரித்து வருகிறது.

வெளிநாடுகளில் குளிர்பிரதேசங்களில் விளையும் காய்கறிகள், தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானலில் விளைவிக்கப்பட்டு விற்பனைக்கு வருகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் அதிகளவில் விற்பனை செய்யப்படும் புதிய வகை காய்கறிகள் குறித்த விவரம்:

**சைனா கோஸ்:** காலிபிளவர் போன்ற தோற்றம் கொண்ட சைனா கோஸ், பிரைட் ரைஸ், சப்பாத்தி, சாதத்திற்கு "சைட் டிஷ்' தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ சைனா கோஸ் 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வரத்து அதிகரிக்கும் பட்சத்தில் கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளது. வழக்கமான முட்டை கோசை விட சுவை அதிகம் இருப்பதால், இவற்றின் விற்பனை சமீபகாலமாக அதிகரித்துள்ளது.

**வெள்ளை நூக்கல்:** வழக்கமான நூக்கல் பச்சை நிறத்தில் காணப்படுகிறது. ஆனால், இது வெள்ளை மற்றும் நீல நிறம் கலந்த புது நிறத்துடன் தோற்றம் அளிக்கிறது. இவற்றை ஓட்டல்களில் குருமா தயாரிக்க பயன்படுத்துகின்றனர்.
வரத்து மற்றும் தரத்திற்கு ஏற்றபடி ஒரு கிலோ 25 முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பொதுமக்களும் இவற்றை வாங்கி சென்று குருமா, பருப்புடன் கூட்டு தயாரிக்கின்றனர். குறிப்பாக, அசைவ பிரியர்கள் ஆட்டு இறைச்சியுடன் குழம்பு போல் சமைத்து சாப்பிடுகின்றனர். மற்ற காய்கறிகளை விட வெள்ளை நூக்கல் விற்பனை, மார்க்கெட்டில் சக்கை போடு போடுகிறது.

**கலர் குடைமிளகாய்:** மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களில் பல ஆண்டிற்கு முன்பில் இருந்தே குடை மிளகாய்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. உயர்தட்டு மக்களால் விரும்பி உண்ணப்பட்ட இவை, தற்போது நடுத்தர மக்களை கவர்ந்துள்ளன. இதனால், இவற்றை வாங்கி அதிகளவில் சமைத்து சுவைக்க துவங்கியுள்ளனர். ஓட்டல்கள் மற்றும் "பாஸ்ட் புட்' உணவுகளில் கவர்ச்சியூட்டும் நிறத்தை கொடுப்பதற்காகவும், சுவைக்காகவும், இவற்றை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். பொதுமக்களும், இவற்றை வாங்கி சென்று, இறைச்சி, இறால் போன்ற அசைவ உணவுகளில் சேர்த்து சமைத்து சாப்பிடுகின்றனர். இவை ஒரு கிலோ 60 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை

விற்பனை செய்யப்படுகிறது.

**சுக்னி:** வெள்ளரிக் காய்களுக்கு மாற்றாக வந்த புதுவரவு. சாதாரண வெள்ளரிக் காய்களில் விதைகள் அதிகம் இருக்கும். ஆனால், சுக்னியில் விதையே இல்லை. மேலும் உண்பதற்கு மிகவும் மென்மையாகவும், சுவையாகவும் உள்ளது. கோயம்பேடு மார்க்கெட்டில் கிலோ 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஓட்டல்கள், பாஸ்ட் புட்களில் "சாலட்' செய்வதற்கும், சமைத்த உணவு பொருட்களை  அலங்கரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இதை வாங்கிச் சென்று தோல் நீக்கி, பருப்புடன் சமைத்து சாதம் மற்றும் சப்பாத்திக்கு "சைட் டிஷ்' பரிமாறப்படுகிறது.

**லீப் லெட்யூஸ்:** கொத்தமல்லி, புதினாவிற்கு மாற்றாக உணவுகளில் சுவை மற்றும் புத்துணர்ச்சி அளிக்க "பிரட் சான்விச்', 'பர்கர் போன்றவற்றிலும், "சூப்' தயாரிப்பிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. "பாஸ்ட் புட்' கள் பயன்பாட்டிற்காக இவை அதிகம் பயன்படும் நிலையில், சென்னையில் வசிக்கும் வடமாநிலத்தைச் சேர்ந்த மக்களும், இவற்றை அதிக அளவில் வாங்கிச் சென்று பலவகை உணவுகளில் சேர்த்து சமைத்து சாப்பிடுகின்றனர். இவை ஒரு கிலோ 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**கிளை கோஸ்:** வழக்கமான முட்டை கோஸ் அளவை விட பல மடங்கு சிறியதாக உள்ளது. இதனை "ஜூனியர்' கோஸ் என்றும் அழைக்கின்றனர். கோலி குண்டு அளவிற்கு தோற்றம் கொண்ட இந்த கோஸ், ஸ்டார் ஓட்டல்களில் உணவு சமைப்பதற்காக அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.  கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ 80 முதல் 100 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஓரளவு வசதி படைத்த நடுத்தர மக்களும், இதை அதிகளவில் வாங்கி சென்று கூட்டு, பொரியல் செய்து உட்கொள்கின்றனர்.

**"செர்ரி' தக்காளி:** சாதாரண தக்காளியைக் காட்டிலும் மிகச் சிறிய அளவில் காணப்படும் இந்த தக்காளி, பார்ப்பதற்கு "செர்ரி' பழம் போன்று உள்ளது. இது உணவு சமைப்பதற்கும், சூப்களிலும் சேர்க்கப்படுகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, சமைக்காமல் அப்படியே சாப்பிடவும் வாங்கிச் செல்கின்றனர். தற்போது, ஒரு கிலோ செர்ரி தக்காளி 40 முதல் 60 ரூபாய் என்ற விலையில் கிடைக்கிறது.

**அதிக லாபம் தரும்"முள்ளில்லா மூங்கில்' சாகுபடி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 12,2010,00:00 IST



**தாம்பரம் :** அதிக வருமானத்தை தரும் முள்ளில்லா மூங்கில் சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என்று வன விரிவாக்க மையம் கூறியுள்ளது. மூங்கில் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்காக பல்வேறு உதவிகளை இம்மையம் செய்ய தயாராக உள்ளது. மூங்கில், புல் வகையை சார்ந்த ஒரு தாவரம் ஆகும். இது "பச்சைத்தங்கம்' என்று அழைக்கப்படுகிறது. மூங்கிலில், உலகில் ஆயிரத்து 400 வகைகள் உள்ளன.

இதில், இந்தியாவில் மட்டும் 136 வகைகள் உள்ளன. மூங்கில்களில் சில இனங்கள் ஒரே நாளில் 30 செ.மீ., வரை வளரும் தன்மை கொண்டது. தமிழகத்தை பொறுத்தவரை பெருவாரை (பொந்து மூங்கில்) மற்றும் சிறுவாரை (கல் மூங்கில்) என்ற இரண்டு வகைகள் மட்டுமே உள்ளன. இவைகளில் முட்கள் ஒன்றோடு ஒன்று பின்னி காணப்படுவதால், விவசாயிகள் வெட்டி எடுப்பதற்கு மிகுந்த சிரமும், அதிக செலவும் செய்ய வேண்டியுள்ளது.

முள்ளில்லா மூங்கில்களில் இப்பிரச்னைகள் இல்லை. தமிழக வனத்துறையின் ஆராய்ச்சி பிரிவு தமிழ்நாட்டின் வெவ்வேறு மண் வகை மற்றும் தட்ப வெட்ப நிலைகளுக்கு உகந்த "பேம்பூஸா வல்காரிஸ்', "பேம்பூஸா நூட்டன்ஸ்', "பேம்பூஸா டுல்டா', "பேம்பூஸா பல்கூவா' ஆகிய நான்கு முள்ளில்லா மூங்கில் இனங்களை பல சோதனைகள் மூலம் கண்டறிந்து அவைகளை விவசாயிகள் லாபகரமாக பயிரிடுவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில்,"பேம்பூஸா டுல்டா' வகை

மூங்கில் ஓரளவு களர் மண்ணுள்ள நிலங்களிலும் வளர்க்கலாம். இவ்வகை மூங்கில்கள் குறைந்த நீர் மேலாண்மையிலும் நன்றாக வளர்ந்து பயன்தரும். சொட்டுநீர் பாசனம் மூலம் நீர் வசதி செய்து வளர்ப்பதன் மூலம் அதிக மகசூலும், வருமானமும் ஈட்டலாம்.

மூங்கில் விதைகள் கொண்டும் நாற்றுக்களை உற்பத்தி செய்யலாம். ஆறு மாத வயதுள்ள கன்றுகளை நிலங்களில் நடலாம். செடிகளின் வேர்கள் மண்ணுக்கு வெளியில் தெரியாத வண்ணம் குழிகளை சுற்றி மண்ணை கொண்டு நிரப்ப வேண்டும். நடப்பட்ட கன்றுகளுக்கு மழையில்லா வறட்சி காலங்களிலும், கோடையிலும் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சுவது நாற்றுக்களின் இழப்பை தவிர்க்க உதவும். மூங்கில் கன்றுகள் நடப்பட்ட ஐந்தாம் ஆண்டிருந்து ஒவ்வொரு தூரிலும் 30, 40 கழிவுகள் வளர்ந்திருக்கும். ஐந்தாவது ஆண்டிற்கு பிறகு ஒவ்வொரு மூங்கில் குத்திலிருந்தும் 8 முதல் 10 முதிர்ந்த மூங்கில்களை அறுவடை செய்யலாம்.

**பலன்கள் அதிகம்**

மூங்கில்கள் மண் அரிப்பை தடுத்து மண்வளத்தை காப்பதுடன், நீர்வளத்தையும் பெருக்க உதவுகிறது. வளர்ந்த மூங்கில்கள் வீடுகள் கட்ட தாங்கு குச்சிகளாக பயன்படுகிறது. குடிசைகள், சிறுவீடுகள் கட்ட மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுகிறது. உணவகங்களில் உள் அலங்கார பொருள் செய்ய உதவுகிறது. இளம் குருத்துக்கள் ஊறுகாய் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிக்கவும், நூல் இழைகள், ஆடைகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. காகிதம், பிளைவுட் மற்றும் பார்டிக்கிள் போர்டுகள் தயாரிக்க பயன்படுகிறது. அகர்பத்தி, பட்டாசுகள், கூடைகள், பர்னீச்சர்கள் தயாரிப்பில் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது. சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளில் மூலப் பொருளாகவும் உதவுகிறது. மூங்கில் பயிரிட ஆர்வமுள்ள விவசாயிகள் நன்மங்கலம் வன விரிவாக்க மையத்தை தொடர்ப்பு கொள்ளலாம்.

தினத் தந்தி

## நடப்பு நிதி ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் கொத்தவரங்காய் ஏற்றுமதி ரூ.623 கோடியை தாண்டியது



சுதானுகா கோசல்

கொல்கத்தா

கொத்தவரங்காய்க்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. சமையலுக்கு மட்டுமின்றி பல்வேறு தொழில்துறைகளிலும் இதன் பயன்பாடு உயர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

எட்டு மாதங்களில்...

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான எட்டு மாத காலத்தில் கொத்தவரங்காய் ஏற்றுமதி 623.32 கோடியாக அதிகரித்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.395.95 கோடியாக இருந்தது.

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் கொத்தவரங்காய் ஏற்றுமதி 2.50–2.60 லட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற நிதி ஆண்டில் 2.20 லட்சம் டன்னாக இருந்தது.

பாகிஸ்தான் நாட்டில் மழை மற்றும் வெள்ளத்தால் அங்கு உற்பத்தி குறைந்து போனது. இந்தநிலையில் அமெரிக்காவில் கொத்தவரங்காய்க்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனையடுத்து நடப்பு நிதி ஆண்டில், ஏற்றுமதி சென்ற நிதி ஆண்டை விட 10–15 சதவீதம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா–சீனா

கொத்தவரங்காய், பெயிண்ட், கட்டுமானம், அழகு சாதனப் பொருள்கள், சுரங்கம் மற்றும் எண்ணெய் துரப்பணம் போன்ற தொழில்துறைகளிலும் அதிக அளவில்

*பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் சீனா உள்ளிட்ட பல நாடுகள், நம்நாட்டிலிருந்து அதிக அளவில் கொத்தவரங்காயை இறக்குமதி செய்து கொள்கின்றன. இதுகுறித்து மும்பையைச் சேர்ந்த கொத்தவரங்காய் ஏற்றுமதி நிறுவனத்தின் தலைமைச் செயல்அதிகாரி பெரு ஜெயின் கூறும்போது, "நடப்பு ஆண்டில் 50–60 லட்சம் டன் கொத்தவரை விதைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். பொதுவாக உள்நாட்டில் நவம்பர் 15–ந் தேதி முதல் ஜனவரி 15–ந் தேதி வரை கொத்தவரங்காய் மிக அதிக அளவில் கிடைக்கும். இந்தநிலையில் வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருவதால் இதன் ஏற்றுமதியும், நன்கு இருக்கும்" என்று தெரிவித்தார்.*

*முன்பேர வர்த்தகம்*

*நடப்பு சந்தையில் மட்டுமின்றி முன்பேர வர்த்தக சந்தைகளிலும் கொத்தவரங்காய் விலை அதிகரித்தே காணப்படுகிறது. இவ்வாண்டு சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. இதனையடுத்து 70–80 லட்சம் மூட்டைகள் அளவிற்கு கொத்தவரங்காய் உற்பத்தி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*என்.சி.டீ.எக்ஸ். நடப்புச் சந்தையில் அக்டோபர் மாதத்தில் ஒரு குவிண்டால் கொத்தவரங்காய் விலை ரூ.4,803.60–ஆக இருந்தது. இது, நவம்பர் 10–ந் தேதி அன்று ரூ.5,508.40–ஆக அதிகரித்துள்ளது. என்.சி.டீ.எக்ஸ். முன்பேர வர்த்தக சந்தையில், இதே காலத்தில் இதன் விலை ரூ.4,764 என்ற அளவிலிருந்து ரூ.5,334–ஆக உயர்ந்திருந்தது.*

## மழை பாதிப்பில் இருந்து காப்பாற்ற பயிர்களை காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

*ஊட்டி, நவ.13–*

*மழை, வெள்ளம் உள்பட பல்வேறு பாதிப்புகளில் இருந்து விவசாயிகளை காப்பாற்ற பயிர்களை காப்பீடு செய்ய அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.*

*தேசிய பயிர் காப்பீடு திட்டம்*

*தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இதற்கு விவசாயி களிடம் அதிக விழிப்புணர்வும், விவசாய துறையும், கூட்டுறவு துறையும் காட்டியுள்ள விரிவாக்கமும் காரணம் என்றாலும் கூட இந்திய அரசாங்கமே போற்றத்தக்க அளவில் மாநில அரசாங் கத்தின் 50 சதவீத பிரிமியத்தில் மானியம் தருகிறது.*

*இந்த ஆண்டும் நெல் சம்பா விற்கு பயிர் கடன் பெற விவசாயிகள் சேர்வதற்கான கடைசி நாள் 15.12.2010 என்றாலும் கூட வெள்ளம், வறட்சி என்று முன் கூட்டியே*

தெரிந்தால் பிரிமியம் செலுத்துவது நிராகரிக்கப் படும். ஆகவே வங்கிகளும் (கூட்டுறவு மற்றும் வர்த்தக) விவசாயிகளும் நேரம் தாழ்த்தாமல் இந்த திட்டத்தில் உடனடி சேருமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் பிரிமியம்

நெல் சம்பா பயிருக்கு ஒரு ஏக்கருக்கு சாதாரண பிரிமியம் 55 சதவீதம் மானியம் போக சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.117, மற்றும் 50 சதவீதம் மானியம் ஏனைய விவசாயிகளுக்கு ரூ.130, இதற்கு மதிப்பு ரூ.13 ஆயிரத்து 024 மட்டுமே. பயிர் கடன் பெறா விவசாயிகள் விருப்பத்தின் பேரில் கூடுதல் பிரிமியம் இதனுடன் சேர்த்து செலுத்தினால் பலன் அதிகமாக பெறலாம். ஏக்கருக்கு கூடுதல் பிரிமியமாக சிறு, சிறு விவசாயிகள் செலுத்த வேண்டியது ரூ.456, ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டியது ரூ.507 இதன் மதிப்பு ரூ.11 ஆயிரத்து 396.

ஆக சாதாரண மட்டும் கூடுதல் மதிப்பு ஒரு ஏக்கருக்கு ரூ.24 ஆயிரத்து 420. இரண்டும் சேர்த்து சிறு, சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் ஒரு ஏக்கருக்கு ரூ.574 மட்டுமே. ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டியது ஒரு ஏக்கருக்கு ரூ.637.

விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு திட்டம்

விவசாயத்தில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து, இழப்பீடுகளில் இருந்து விவ சாயிகளை காப்பாற்ற இந்திய அரசு (மாநில அரசுகளின் உதவியுடன்) இந்திய வேளாண் (விவசாய) காப்பீடு நிறுவனத்தை நிறுவி உள்ளது.பயிர்களை காப்பீடு செய்ய சுலபமான 6 வழிகள் (கடன் பெறா விவசாயிகளுக்காக) பின்வருமாறு:–

அருகில் வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு இருக்க வேண்டும். வங்கி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் விவசாய துறையிடம் கிடைக்கும் ஏ.ஐ. சி.யின் கடன் பெறா விவசாயிகள் சேரும் விண் ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்யவும்.

தங்களின் நிலம் மற்றும் பயிரிடும் பயிர்க்கான விவ ரங்களை வங்கியில் தெரிவிக் கவும். வங்கி சேமிப்பு கணக்கு மூலம் காப்பீட்டு கட்டண தொகையை செலுத்தவும். காப்பீட்டு கட்டணம் செலுத்த கடைசி நாளுக்கு முன்னதாக செலுத்தி விடவும். (வறட்சி, வெள்ளம் முன் கூட்டியே தெரிந்தால் குறிப் பிட்ட தேதி மாற்றப் படும்).

இழப்பீடு

பயிர்களுக்கு மகசூல் அடிப் படையிலான இழப்பீடு ஏதும் இருந்தால் திட்டங்களுக்கு உட்பட்ட உங்களுக்கான இழப்பீட்டு தொகை உங்கள் வங்கி கணக்கில் ஏ.ஐ.சி. மூலமாக வரவு வைக்கப் படும்.

மேலும் விபரங்களுக்கு அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட் (மத்திய அரசு நிறுவனம்), மண்டல அலுவலகம் 323, முதல் தளம் ஆந்திரா இன்சூரன்ஸ் பில்டிங், தம்புசெட்டி தெரு, சென்னை– 600 001. போன்: 044– 43403400–16 என்ற முகவரியையும், தொலைபேசி எண்ணையும் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மத்திய அரசின் அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்திய லிட்டின் மண்டல மேலாளர் சி.அன்பரசு தெரிவித்துள்ளார்.